**மஹுவ பிரதேச சபை**

**குருநாகல் மாவட்டம்**

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஜுன் 15 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 09 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 25 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடபட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மஹுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

-----------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பாதை தகர்க்கும் இயந்திரத்தை வாடகைக்கு கொடுத்ததன் மூலம் 2014 திசெம்பர் 31 திகதி நேரடியாக வங்கிக்கு கிடைத்திருந்த ரூபா 350,000 தொகையினை வருமானக் கடன்பட்டோர் என ஐந்தொகையில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) இலக்கம் PF-4508 கொண்ட ரூபா 7,550,000 பெறுமதியான கப் வண்டி மற்றும் ரூபா 1,300,000 பெறுமதியான இலக்கம் RD-8238 கொண்ட டிரக்டர் மற்றும் டேலர் வண்டி என்பனவற்றை மோட்டார் வண்டிகள் மற்றும் மாட்டு வண்டிக் கணக்கில் பதிவு செய்திருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்படாத கணக்குகள்

--------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான இறுதி மீதியின் கீழ் 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்குகளின் பிரகாரம் மற்றும் தொடர்புடைய பதிவேடுகளின் இடையே ரூபா 20,003,455 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டது.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 1,092,000 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக விரிவான பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

02. நிதி மீளாய்வு

----------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவு ரூபா 1,208,661 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,165,912 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 5,374,573 இற்கான வீழ்ச்சியொன்று காணப்பட்டது. இந்த நிதி விளைவிற்கு ரூபா 98,159,141 இற்கான மூலதன உதவி மற்றும் ரூபா 90,750,925 இற்கான மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவு ரூபா 6,199,555 இற்கான மிகையொன்றாக மாறியிருந்தது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிச் செயலாற்றுகை

-----------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானமாகிய ரூபா 63,566,000 தொகையில் மொத்தமாக 72% என ரூபா 45,618,000 தொகையும் சபையினால் உருவாக்கிய வருமானம் அல்லாத நீதிமன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம்

சம்பள மீளளிப்பு போன்ற பெறுவனவுகளினை அடக்கியுள்ளது. மூலதன வருமானமாகிய ரூபா 98,159,000 இற்கான மொத்தத் தொகையும் கமநெகும, மகநெகும போன்ற மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் மூலம் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி விடயங்களுக்காக கிடைக்கப்பெற்ற பணத்தினை அடக்கியுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவு ஆகிய ரூபா 64,775,000 தொகையில் மொத்தமாக 63% என ரூபா 41,087,000 தொகை தனிப்பட்ட சம்பளங்களுக்கான செலவுகளாகக் காணப்பட்டதுடன், அவற்றில் மொத்தமாக நூற்றிற்கு 55% ஆகிய ரூபா 22,582,033 இற்கான சம்பள மீளளிப்பு என உள்ளூராட்சி ஆணையாளரினால் வழங்கப்பட்டிருந்ததுடன் அப் பெறுமதி ஏனைய வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதே போல் மூலதன செலவு ஆகிய ரூபா 90,751,000 தொகையில் மொத்தமாக சுமார் நூற்றிற்கு 4% என ரூபா 3,354,522 தொகை மாத்திரம் சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்ததுடன் மீதியான நூற்றிற்கு 96% ஆகிய ரூபா 87,396,478 இற்கான தொகை கமநெகும, மகநெகும ஆகிய மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி விடயங்களை அடக்கியுள்ளது.

2.3 வருமான நிருவாகம்

-------------------------------

2.3.1 வீத வரி

-------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை வீத வரி ரூபா 2,115,840 ஆகக் காணப்பட்டதுடன் 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 32 முதல் 42 வரை விதிகளின் பிரகாரம் காலாண்டை அடிப்படையாகக் கொண்டு நிலுவை பட்டோலை தயாரித்து குறிப்பிட்ட அறிவித்தல் வழங்கிய பின்னர் ஆதனங்களை தடைசெய்து நிலுவை வீத வரி அறவீடு செய்யும் நடைமுறையினை அமுல் நடத்தியிருக்கவில்லை.

2.3.2 செலுத்துகை டவர் வர்த்தக வரி

-----------------------------------------------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 27 தொலைதொடர்பு செலுத்துகை டவர்கள் நிறுவப்பட்டிருந்ததுடன் அவற்றில் இருந்து குறைந்த பட்சம் அறவிடக் கூடியதாக இருந்த ரூபா 81,000 இற்கான வரியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.3.3 இணக்கஞ் சான்றிதழ் வருமானம்

----------------------------------------------------

அபிவிருத்தி அனுமதிப் பத்திரத்தின் மீது நிர்மாணிக்கப்பட்டிருந்த, நிர்மாணிப்பதற்காக இணக்கஞ் சான்றிதழ் பெற்றுக் கொள்ளாமையின் காரணமாக சபைக்கு ரூபா 194,400 இற்கான வருமானம் ஒன்றினை இழந்துள்ளது.

2.3.4 சுற்றாடல் அனுமதிப்பத்திர வருமானம்

------------------------------------------------------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாமல் வர்த்தகங்கள் நடத்தப்படாத காரணத்தினால் ரூபா 59,500 இற்கான வருமானம் ஒன்றினை சபை இழந்துள்ளது.

2.3.5 நீர் வருமானம்

-------------------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 241 நீர் நுகர்வோரிடமிருந்து 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 465,431 இற்கான நிலுவை நீர்க் கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்தது.

03. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

-----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

(அ) 2009 ஆண்டு முதல் உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்படாமல் பெக்கோ இயந்திரத்தை வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கியிருந்ததுடன், பெக்கோ இயந்திரத்திற்காக கிடைக்கும் வருமானம் 2013 ஆண்டுடன் நேரொப்ப ரூபா 517,440 இனால் குறைந்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள மற்றும் சேவையை விட்டுச் சென்றுள்ள 11 அலுவலர்களிடம் ரூபா 65,037 இற்கான பதவியணிக் கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) சபைக்குச் சொந்தமான 187 மைய வாடிகளின் பெறுமதியினை கணக்கீடு செய்திருக்கவில்லை. அத்துடன் அவற்றில் 67 மையவாடிகள் தொடர்பாக காணி உறுதி சபையிடம் காணப்படவில்லை.

3.2 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

-----------------------------------------------------

பல வருட காலத்திற்கு முன்னர் அம்பன்பொல கொங்கிரீட் செயற்திட்டத்திற்காக கிடைத்திருந்த 40 கொங்கிரீட் அச்சுக்கள் பயன்படுத்தப்படாமல் சபை வளவில் வைக்கப்பட்டிருந்தது.

04. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) ஒப்பந்த நிருவாகம்